

சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில், நேற்று (13.08.2025) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகக் கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகள் குறித்தும், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்தும் சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா அவர்கள், கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம்

# ரூ.78.59 கோடி மதிப்பீட்டில் 20 இடங்களில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, ஆக.14-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று 13.08.2025, சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மானியக்கோரிக்கையின் போது சுற்றுலாத் துறையின் மீது தனிக்கவனம் கொண்டு பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறார். அதனை செயல்படுத்தும் விதமாக சுற்றுலாத் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முடியும் தருவாயில் உள்ள சுற்றுலா மேம்பாடு மற்றும் கட்டட பணிகளான பூம்புகார் பாரம்பரிய நகரத்தினை ரூ.21.98 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல், கரூர் மாவட்டம் ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் பொன்னனியாறு நீர் தேக்கத்தினை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். கன்னியாகுமரி மாவட்டம் ரூ. 3.11 கோடி சித்தார் அணைகள் மற்றும் நீர் தேக்கத்தினை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.

நீலகிரி மாவட்டத்தில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் உதகை படகு இல்லத்தில் சாகச மற்றும் சுற்றுச் சூழல் முகாம் தலமாக உருவாக்குதல், செங்கல்பட்டு மாவட்டம் முதலியார் குப்பம் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் தலமாக உருவாக்குதல் மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லி மலையில் ரூ. 1.87 கோடி மதிப்பீட்டில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் தலமாக உருவாக்குதல், கடலூர் மாவட்டம் பிச்சாவரம் பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்,

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் திற்பரப்பு அருவியை சுற்றுலா தலமாக மேம்படுத்துதல், மாமல்லபுரத்தில் ரூ.8.00 கோடி செலவில் மரகத பூங்காவை பொதுதனியார் பங்களிப்பு முறையில் “ஒளிரும் தோட்டம்” அமைத்தல், ஏற்காட்டில் ரூ.9.82 கோடி மதிப்பீட்டில் அழகியல் நிலப்பரப்பு, காட்சி முனைகள், ஏரி முகப்பு, தெரு அலங்காரம் போன்ற சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல், சஞ்சீவிராயன் கோவில் பகுதியில் ரூ.0.93 கோடி மதிப்பீட்டில் காட்சி முனை அமைத்தல்,

நாகமரை பகுதியில் ரூ.0.48 கோடி மதிப்பீட்டில் காட்சி முனை அமைத்தல், ஜவ்வாது மலை தேனீ பூங்கா பகுதியில் ரூ.0.42 கோடி மதிப்பீட்டில் காட்சிமுனை அமைத்தல் மற்றும் ஜவ்வாது மலையில் சுற்றுச்சூழல் பூங்கா பகுதியில் ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் காட்சிமுனை அமைத்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் மாத்தூர் தொட்டி பாலத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்,

அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயப் பகுதியை ரூ.1.29 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் பிரான் மலைப் பகுதியை ரூ.0.57 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி பகுதியை ரூ.0.96 கோடி மதிப்பீட்டிலும், தெற்கு கள்ளிக்குளம் பகுதியில் ரூ.3.49 கோடி மதிப்பீட்டிலும் தேவாலயப் பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ரூ.1.68 கோடி மதிப்பீட்டிலும் கழுகு மலை பகுதி ஆகிய இடங்களை வழிபாட்டு சுற்றுலா தலங்களாக மேம்படுத்துதல், என மேற்கண்ட இடங்களில் நடைபெறும் பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மருத்துவர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

# முசிறி விவசாயிகளுக்கான வாழைப்பழ குளிர் சேமிப்பகம் அவசியம்!

## மக்களவையில் அருண் நேரு வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.14-

பெரம்பலூர் மக்களவை தொகுதி எம்.பி. என். அருண் நேரு, தமிழ்நாட்டின் முசிறி பகுதியில் வாழும் வாழைப்பழ விவசாயிகளின் பிரச்சினையை இன்று மக்களவையில் விதி 377ன் கீழ் முன்வைத்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

காவிரி நதிக்கரையில் வளமாக விளையும் முசிறி, தொட்டியம், குளித்தலை பகுதிகள் மாநிலத்தின் முக்கிய வாழைப்பழ உற்பத்தி மையங்களாகும். பூவன், ரச்தாளி, நெந்திரன் போன்ற பல்வேறு இனங்கள் இங்கு விளைவிக்கப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

ஆனால், இப்பகுதியில் நவீன குளிர் சேமிப்பு வளாகங்கள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் அறுவடை காலங்களில் தங்களின் பயிர்களை மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால், அவர்களுக்கு பெரும் நிதி இழப்புகள் ஏற்படுகின்றன என்றும், ஆண்டு முழுவதும் செய்த உழைப்பும் வீணாகின்றது என்றும் கவலை வெளியிட்டார்.

திருச்சிராப்பள்ளியில் தேசிய வாழைப்பழ ஆராய்ச்சி மையம் (ICAR NRCB) இருப்பது இப்பகுதியின் மூலதன முக்கியத்துவத்தை காட்டுகிறது.

எனவே, முசிறியில் பெரிய அளவிலான நவீன குளிர் சேமிப்பு வளாகம் அமைப்பதற்கு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி கடம்பத்தூர் ஒன்றியம் பாப்பரம்பாக்கம் ஊராட்சி கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் இத்திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் தொடங்கி வைத்து, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார் உடன் கே.திராவிட பக்தன், கே.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், டி.திலீப் குமார், செங்குட்டுவன், சி.ஆர்.குமார், மெய்யழகன், நந்தகோபால், வி.எஸ்.நேதாஜி, மதியழகன், மோகன சுந்தரம், ஆர்.குமார், ஏ.எஸ்.மணி, எம்.சேகர், ராஜேந்திகுமார், பெருமாள், மாலதி வாசன் , வாசு , கார்த்தி கோபி, மணிகண்டன், ராம்கி பரந்தாமன், உத்திரகுமார், ராமு, மகேஷ், நித்யானந்தம் சந்திரன், சுந்தரமூர்த்தி, உள்பட அரசு அதிகாரிகள் விற்பனையாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்




தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் கிழக்கு ஒன்றியம் கடையநல்லூர் மேற்கு ஒன்றியம் கடையநல்லூர் வடக்கு நகரம் கடையநல்லூர் தெற்கு நகரம் ஆகிய ஒன்றிய, நகர,கழகத்தின் பாக முகவர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டத்தில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து கழக சட்ட துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் உரை ஆற்றினார். இதில் கழக சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது மாவட்ட கழக நிர்வாகிகள் தென்காசி தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தங்கராஜ் பாண்டியன் மற்றும் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# ரூ.20.92 கோடியில் குன்றத்தூர் ஒன்றியத்தில் அடிப்படை வசதிகள்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – பி.கே.சேகர்பாபு அதிகாரியிடம் நிதியை வழங்கினர்!

சென்னை, ஆக. 14-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், கொளப்பாக்கம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக ரூ.20.92 கோடி நிதியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் க.ஆர்த்தியிடம் வழங்கினர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (13.08.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையிலுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், கொளப்பாக்கம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.20.92 கோடி நிதியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் க. ஆர்த்தி அவர்களிடம் வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய அய்யப்பந்தாங்கல், பரணிபுத்தூர், கொளப்பாக்கம், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், தண்டலம் ஆகிய சென்னை புறநகரை ஒட்டி வளர்ந்து வரும் ஊராட்சிகளில் உள்ள சாலைகளை செப்பனிடுதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.20.92 கோடி நிதி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் க.ஆர்த்தி, முதன்மை தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து பொன்னேரி சட்டமன்ற தொகுதி சோழவரம் ஒன்றியம் நெடுவரம்பாக்கம் ஊராட்சி கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் வீடுகளுக்கே நேரில் சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார் உடன் எல்லாபுரம் பி. ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ. கே.சுரேஷ், ராபர்ட் ராஜதுரை, கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், வெங்கடாஜலபதி, கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், மு.முரளிதரன், நா.மோகன்ராஜ் பா.து.தமிழரசன், அத்திப்பட்டு எம்.டி.ஜி.கதிர்வேல், மணிமாறன், உள்பட கூட்டுறவு நியாய விலை கடை அதிகாரிகள் விற்பனையாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.கே.ஜெகதீசன்

**ஆகஸ்ட் 14 (2020)**



**கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.**

**சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் “நச்சுக்கோப்பை” நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.**

**2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் “நெஞ்சுக்கு நீதி”யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**